திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நீங்கள் கூறியபடியே 7 மாதங்கள் ஆகிவிட்டன. அதற்கு முன்னாலேயே நான் கேள்வி எழுதிக் கொடுத்திருக்கிறேன். அங்கேயும் பஸ்ஸை அதற்குள் ஓட விட்டு விட்டார்கள். பிரச்னை என்னவென்றால் 1 வருஷத்திற்கும் 7 மாதத்திற்கும் அதிகமாக வித்தியாசம் கிடையாது என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுதிக் கொடுத்த பிறகு இப்பொழுதுதான் மீண்டும் சட்ட சபை கூடுகிறது. கேள்வி நேரத்திலும் முதல் முதலாக எடுத்துக் கொண்டாகி விட்டது.

சாத்தான்குளம் வழியாக விரைவுப் பேருந்துப் பணி.

* வினா எண் 96— திரு. ர. ஜெயமணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் நாகர்கோவில் செல்லும் விரைவு வண்டிகளை சாத்தான்குளம் வழியாக விடும் குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் தொடங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ர. ஜெயமணி : தலைவர் அவர்களே, சாத்தான் குளம் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதினால், அதிக தூரம் செல்லும் பயணிகளுக்கு வசதியாக இருக்கவும் நாகர்கோவில் செல்லும் விரைவு வண்டிகளை சாத்தான்குளம் வழியாக விடப் படுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் நெடுந்தூரப் பயணிகளின் குறையைத் தீர்ப்பதற்கு ஏதாவது பாஸ்ட் பாசஞ்சர் பஸ்ஸாவது விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஓடுகிற பேருந்துகள் எல்லாமே விரைவுப் பேருந்துகள். திருநெல்வேலியிலிருந்து நாங்குநேரி, வள்ளியூர் வழியாகச் செல்கின்றன. நாசரத், சாத்தான்குளம் வழியாகப் போகிறபோது மேற்கொண்டு 25 மைல் அதிகமாகச் செல்கிற நிலைமை ஏற்படும் என்று கருதப்பட்டது. வேண்டுமானால் ஓரிரு பேருந்துகளை இந்த வழியாக, முக்கியமாக சாத்தான்குளம் வழி

1979 நவம்பர் 3]

யாக ஓட விட்டு தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று கருதுகிறேன். நான் ஃபாஸ்ட் லிமிடெட் பஸ் என்று சொல்லக் கூடிய பேருந்துகளை விட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறேன். இதில் கூட ஓரிரு பஸ்களை சாத்தான்குளம், நாசரத், ஆழ்வார் திருநகரி ஆகிய இடங்களின் வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகளை விட நடவடிக்கை எடுக்கிறேன்.

[முற்பகல் 10.00]

திரு. மு. ஜான் வின்செண்ட்: நாகர்கோவிலில் இருந்து சென்னைக்கு வரும் விரைவு வண்டிகள் மூன்றடைப்பு பகுதி வழியாக வருகிறது. அமைச்சர் அவர்கள் 22 மைல்கள் அதிக மாக சுற்ற வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். வள்ளியூர், சாத்தான்குளம், முதலைக்காரப்பட்டி வழி வரும்போது 15 மைல் கள்தான் வரும். அந்தப் பகுதிகளில் கல்லூரிகள், தொழிற் சாலைகள் இருப்பதால் அந்தப் பகுதிகள் வழி, சாத்தான்குளம் வழி விரைவுப் பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சாத்தான்குளம் வழி விரைவுப்பேருந்து விடவேண்டும் என்று சொன்னார்கள். அந்த எண்ணத்தை எதிர்க்கவில்லை. சாத்தான்குளம் வரும் போது நாஸரத் செல்லாமலிருக்க முடியாது. அது முக்கியமான இடம். அங்கு செல்லும்போது 22 மைல் தூரமாகிறது. இரண்டையும் இணைக்குமளவிற்கு இரு பேருந்துகள் விட இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப்: திசையன்விளை முக்கியமான பகுதி என்பதால், நாகர்கோவிலிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு செல்கிற பேருந்துகளை திசையன்விளை வழி செல்ல திசையன் விளையையும் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; நான் நெல்லைக்குச் சென்றிருந்தபோது உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே இந்தக் கோரிக்கையை விட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து வருகிறோம். விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ்: சென்னையிலிருந்து புதுக்கோட்டைக்கு 25ம் தேதி அன்று புதிய பேருந்து விடுவதாக அறிவித்தார்கள். அது இதுவரையில் விடவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒரு நிகழ்ச்சியில் அங்கு நான் கலந்து கொள்கிறபோது அந்த பேருந்தை துவக்குவதாக இருந்தது. அந்தப் பேருந்து தயாரான நிலையில் இல்லை என்று நிர்வாகிகள் தெரிவித்தார்கள். சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் அது விடப்படும்.

மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்.

* வினா எண். 97— திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக பொது மக்களிடமிருந்து நஞ்சை, புஞ்சை நிலங்கள் எடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்?

(இ) மேற்படி நிலங்களுக்குரிய பணம் பூராவும் கொடுக்கப் பட்டனவா?

(ஈ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; (அ) ஆம்.

(ஆ) 4,111.76 ஏக்கர்

(இ) & (ஈ) ; இதுவரை நில எடுப்புக்காக ஈட்டுத்தொகை ரூ. 19,29,466 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இன்னும் 40.79 ஏக்கர் நிலங்களுக்கான ஈட்டுத்தொகை கொடுக்க வேண்டி இருக்கின்றது. இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : இந்த நீர்த்தேக்கத்திற்காக நிலங்கள் எடுத்து 20 ஆண்டுகளாகி விட்டன. எவ்வளவு பேர்களிடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பேர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; எவ்வளவு பேர்களுடைய நிலங்கள் என்ற விவரம் இப்போது என்னிடமில்லை. மொத்தத் தொகை எவ்வளவு என்ற விவரமும் இப்போது என்னிடமில்லை. எவ்வளவு ஏக்கர்கள் என்ற விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.